**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள்.**

**முன்னிலை - திரு.ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப.**

*செ.மு.ந.க.எண் : 13148 / ம.இ.நிர் / 2019* *நாள்:28.01.2020.*

பொருள்: பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை –அரசு மறுவாழ்வு இல்லங்கள் பிரிவு – செல்வி. L.K.வி.கீர்த்திகா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக அரசு மறுவாழ்வு இல்லம்,விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் – தற்காலிக அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது – 15-02-2017 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பனிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
*1.அரசாணை எண் : 89,மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் : 12-07-2012.*
*2.அரசாணை எண் : 235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ 1)த்துறை, நாள் : 26-09-2013.*
*3.அரசாணை எண் : 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ 1)த்துறை, நாள்: 02-03-2016.*
*4.மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் : 2386 / நிர் - 2/ 2015, நாள் : 10.02.2017.*
*5.அரசாணை எண் : 100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்:01.08.2018.*
*6.நிர்வாக அலுவலர்,அரசு மறுவாழ்வு இல்லம்,விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம்அவர்களின் கடிதம் ந.க.எண் : 1 / அ / 2019, நாள் : 18.12.2019.*

-------------

**ஆணை :**

பார்வை-(4)ல் கண்டுள்ள இவ்வாணையரகச் செயல்முறை ஆணைகளின்படி கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் அடிப்படையிலும் இறந்த அரசு ஊழியர் திரு. L.K..வெங்கடாத்திரி, இளநிலை மறுவாழ்வு அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி என்பவரது வாரிசுதாரர் செல்வி.L.K.V.கீர்த்திகா என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அடிப்படை பணியாளர் தொகுதி மற்றும் சார்நிலை பணிகளுக்கான விதிகள் பொது விதி 10 (அ) (1) ன்படி தற்காலிக அடிப்படையில் ரூ.5200.......20200 தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதன்படி தனியர் விண்ணப்பள்ளி அரசு மறு வாழ்வு இல்லத்தில் 15-02-2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

பார்வை-(5)ல் கண்டுள்ள அரசாணையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையதத்தின் இசைவு தேவையில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (வரையறுக்கப்பட்ட பணிகள்) 2016 விதிகள் 28 ன்படி தனியர் பணியேற்ற நாளான 15-02-2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் செல்வி.L.K.V.கீர்த்திகா, இளநிலை உதவியாளர் பதவியில் பனிவரன்முறை செய்த நாள் முதல் மூன்று ஆண்டு தொடர்பணியில் இரண்டாண்டு காலங்கள் தகுதி காண் பருவத்தில் இருப்பார்.

தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் துறைத்தேர்வு மாவட்ட அலுவலக நடைமுறை நூல் டிசம்பர் 2017 ல் பதிவு எண் : 221700900 என்ற எண்ணில் தேர்வு எழுதி தேர்ச்சிப்பெற்றதற்கான முடிவுகள் அரசு கெஜட் எண்:7, நாள் : 16.03.2018 ல் பக்கம் எண் : 553 ல் பெயர் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தனியர் தகுதி காண் பருவக் காலத்தில் கீழ்க்கண்ட பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

1) பவானி சாகர் அடிப்படை பயிற்சி.

வரையறுக்கப்பட்ட பயிற்சியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்பின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் ஆணையிடப்படுகிறது.

தனியரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலினை இவ்வாணையர அரசு மறுவாழ்வு இல்லங்கள் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு நிர்வாக அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு 1 தொகுதி.

(ஒப்பம்) திரு.ஜானி டாம் வர்கீஸ்
மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்
மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

பெறுநர்:
செல்வி.L.K.V.கீர்த்திகா, இளநிலை உதவியாளர்,
அரசு மறுவாழ்வு இல்லம்,
விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் (நிர்வாக அலுவலர் மூலமாக).

நகல் :
1) நிர்வாக அலுவலர்,அரசு மறுவாழ்வு இல்லம்,விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம்.
2) மாவட்ட / சார்நிலை கருவூல அலுவலர்,விண்ணப்பள்ளி.
3) அரசு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
4) அனுமதி கோப்பு.

//உத்தரவின்படி//

7/01/2020

இணை இயக்குநர்